# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040820

1. District மாவட்டம்: Theni District PS: காவல்நிலையம் V&AC, Theni Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 01/2024 Date: நாள் 27-5-2024

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 25-5-2024 Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1500 Hrs and Time to : நேரம் வரை 1600 Hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27-5-2024 Time : நேரம் 14.30 Hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27-5-2024 Time : நேரம் 16.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் About 15 Kms East

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Thasildar, Andipatti, Theni District.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Subramaniam (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. Rajaram

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1967 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Oil Business (g) Address : முகவரி No. 32/36, Kasthuribai Nagar, Munisipalayam Road, Aarapalayam, Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Khader Sherif, Thasildar, Andipatti Taluk, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

*GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-Computer typed separate sheet enclosed-

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Subramanian 27/5/2024 [signature] 27/5/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27/5/2024 / 1800 hrs.

Name: பெயர் P. SUNDARARAJAN
Rank: நிலை D.S.P. No. எண் V4 A.C Theni

12. F.I.R. contents (Attach separate sheet if required):

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2024-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

**சமர்ப்பிக்கப்படுகிறது**: தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 27.05.2024-ம் தேதி 14.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்டம், ஆரப்பாளையம், முனிசிபாளையம் ரோடு, கஸ்தூரிபாய் நகர், எண்.32/36 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ராஜாராம் என்பவரின் மகன் திரு.ரா.சுப்பிரமணியம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்தாருடன் குடியிருந்து வருகிறேன். நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எண்ணெய் வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு பூர்வீகம் தேனி மாவட்டம், தேக்கம்பட்டி அருகேயுள்ள அம்மாபட்டி கிராமம் ஆகும். தேனி மாவட்டத்தில் உள்ள தேக்கம்பட்டி கிராம சர்வே எண் 36/1ன்படி எனது மனைவி திருமதி.செல்வி மற்றும் எனது மைத்துனர் மகள் காயத்திரிக்கு சொந்தமான 1ஏக்கர் 91 செண்ட் நிலம் உள்ளது. மேற்படி நிலமானது க.விலக்கு - கண்டமனூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையின் கிழக்கு பக்கம் அமைந்துள்ளது. கடந்த ஜீன் 2023-ம் தேதி நாளிதழ் மூலமாக இந்தியன் ஆயில் கார்பரேசனில் இருந்து க.விலக்கு - கண்டமனூர் மாநில நெடுஞ்சாலையில் தேக்கம்பட்டியில் பெட்ரோல் பங்க் அமைய உள்ளதாகவும் விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் வந்திருந்த விளம்பரம் பார்த்து நான் கடந்த 17.10.2023-ம் தேதி ரூ.10,000/- பதிவுக்கட்டணம் செலுத்தி ஆன்லைனில் விண்ணப்பித்தேன். அதை தொடர்ந்து மேற்படி எனது இடத்தை சம்பந்தப்பட்ட **IOC** நிறுவனத்திலிருந்து வந்து களஆய்வு செய்தனர். தொடர்ந்து எனது மின்னஞ்சலுக்கு 11.12.2023ம் தேதி மதுரை பாண்டியன் ஹோட்டலில் நடைபெறவிருக்கும் குலுக்கலில் கலந்து கொள்ள வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. குலுக்கலில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டு எனது மனைவிக்கு சொந்தமான மேற்படி இடத்தில் எனது பெயரில் பெட்ரோல் பங்க் நடத்த எனது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் தொடர் நடைமுறையாக 1. தீயணைப்பு துறை 2. காவல்துறை 3. நெடுஞ்சாலைதுறை 4. வருவாய் துறை ஆகிய துறைகளில் இருந்து தடையில்லா சான்று பெற்று வர இந்தியன் ஆயில் கார்பரேசனால் தேனி மாவட்ட வருவாய் அலுவலருக்கு என் மூலம் கொடுத்தனுப்பப்பட்ட கோப்பை நான் கடந்த 20.03.2024-ம் தேதி தேனி மாவட்ட வருவாய் அலுவலரிடம் கொடுத்தேன். அவர்கள் விண்ணப்பத்தின் மீது மேல் நடவடிக்கை எடுப்பதாக

சொன்னார்கள். அதைத்தொடர்ந்து மேற்படி தேனி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து அனுப்பப்பட்ட தபாலின்படி தீயணைப்பு துறை, காவல்துறை, நெடுஞ்சாலை துறை ஆகியோர் இடத்தை பார்வையிட்டு தடையில்லா சான்று மேற்படி தேனி மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட்டுவிட்டது. ஆனால் வருவாய் துறை மூலம் சம்மந்தப்பட்ட ஆண்டிபட்டி தாசில்தார் அவர்களிடமிருந்து தடையில்லாச் சான்று அனுப்பப்படாமல் தாமதமானது. அதற்காக மே 2024ம் மாதம் மூன்றாவது வாரத்தில் இரண்டு மூன்று முறை ஆண்டிபட்டி தாசில்தார் திரு.காதர் ஷெரிப் அவர்களிடம் நேரிலும் கைப்பேசி மூலமும் எனது தடையில்லா சான்று பற்றி கேட்டேன். அப்போது அவர் உங்கள் கோப்பின் மீது இரண்டொரு நாளில் நடவடிக்கை எடுக்கிறேன், போன் செய்து விட்டு வாருங்கள் என்றார். பின்னர் 22.05.2024ம் தேதி தேனி மாவட்டத்திலுள்ள எனது உறவினர் இறந்துவிட்டபடியால் மேற்படி காரியத்திற்கு வந்தபோது ஆண்டிபட்டி தாலுகா தாசில்தார் திரு. காதர்ஷெரீப்பிடம் தொலைபேசியில் அழைத்து எனது கோப்பு சம்மந்தமாக கேட்டேன், அவர் வரும் வெள்ளிக்கிழமை(24.05.2024ம் தேதி) மதியம் உங்களது இடத்தை வந்து களஆய்வு செய்கிறேன் அன்று நீங்கள் ஆஜரில் இருங்கள் என்று கூறினார். ஆனால் அன்றையதினம் அவர் வருவதை உறுதிப்படுத்திக்கொள்ள நான் அவரை 24.05.2024 காலை கைப்பேசியில் அழைத்து கேட்டபோது இன்று வேறு வேலை இருப்பதாகவும் அதனால் மறுநாள் சனிக்கிழமை (25.05.2024ம் தேதி) என்னை வரச்சொல்லி சொன்னார். அதன்படி 25.05.2024ம் தேதி மதியம் சுமார் 03.00 மணி வாக்கில் அவரது அரசு ஜீப்பில் டிரைவருடன் அவர் மட்டும் வந்து எங்களது தேக்கம்பட்டி இடத்தை கள ஆய்வு செய்தார். கள ஆய்வு செய்து முடித்து அவரது ஜீப்பில் ஏறி உட்கார்ந்தபின் என்னை அழைத்து தடையில்லாச் சான்று தருவதற்கு ரூ.1/- லட்சம் தரவேண்டும் என்று கூறினார். தொடர்ந்து என்னையும் அவரது ஜீப்பில ஏற்றிக்கொண்டு அவரது ஆண்டிபட்டி அலுவலகத்திற்கு அழைத்துச்சென்றார். அவரது அலுவலகத்தில் வைத்து மாலை சுமார் 04.00 மணிக்கு மீண்டும் என்னிடம் அவருக்கு ரூ.1 லட்சம் தரவேண்டியதை ஞாபகப்படுத்தி விரைந்து ஏற்பாடு பண்ணுங்கள் என்று கூறினார். அதற்கு நான் சார் என்னால் அவ்வளவு புரட்ட முடியாது என்று அவரிடம் கெஞ்சிக்கேட்டபோது எனக்கு தெரியும் பெட்ரோல் பங்கில் எவ்வளவு பணம் லாபம் கிடைக்கும் என்பது, ஒரு லட்சத்திலிருந்து ஒரு ரூபாய் கூட குறைக்க முடியாது, திரும்பத் திரும்ப குறைக்கச் சொல்லி கேட்டு மீண்டும் இந்த அலுவலகத்திற்கு வராதீர்கள். வந்தால் ஒரு லட்சம் பணத்துடன் வாருங்கள் என்று கறாராக கூறிவிட்டார். அப்படி இல்லாவிட்டால் கோப்பு இங்கிருந்து நகராது என்று சொல்லி தான் கேட்ட பணத்தை திங்கட்கிழமை (27.05.2024ம் தேதி) காலை 11.30 மணிக்குள் கொண்டு வந்து கொடுங்கள் என்று சொன்னார். பின்னர் நான் இன்று 27.05.2024ம் தேதி மீண்டும் மதியம் ஆண்டிபட்டி தாலுகா அலுவலகம் சென்று தாசில்தார் திரு.காதர் ஷெரிப் அவர்களை பார்த்து குறைக்க சொல்லி கேட்கலாம் என்று சென்ற போது அவர் ஏற்கெனவே

பணத்தை குறைக்கச்சொல்லி இங்கு வராதீர்கள் என்று சொன்னது ஞாபகம் வந்ததால் என் மனம் மிகவும் வேதனையுற்றது. அதனால் அவரைப்பார்க்காமல் திரும்பி விட்டேன். அப்போது மதியம் சுமார் 01.10 மணிக்கு ஆண்டிபட்டி தாலுகா அலுவலகத்தில் பணியாற்றும் திரு.ஷாகிர் உசேன் என்பவர் 86681 76521 என்ற எண்ணிலிருந்து எனது செல் நம்பர் 98429 53771-க்கு அழைத்து இன்றைக்கு நீங்கள் வருவீர்களா என்று தாசில்தார் கேட்க சொன்னார், இல்லையென்றால் நாளை காலையில் வரச்சொன்னதாக என்னிடம் சொன்னார். அதற்கு நான் அவர் சொன்னபடி நாளை காலையில் வந்து விடுகிறேன் என்று சொன்னேன். பின்னர் நான் யோசித்து பார்த்ததில் எனது பெயரில் க.விலக்கு-கண்டமனூர் மாநில நெடுஞ்சாலையில் உள்ள எனது மனைவி இடத்தில் பெட்ரோல் பங்க் அமைப்பதற்கு வருவாய் துறை தடையில்லாச் சான்று பெற ஆண்டிபட்டி தாலுகா வட்டாட்சியர் திரு. காதர்செரீப் அவர்களுக்கு லஞ்சமாக ரூ.1,00,000/- கொடுப்பதற்கு எனக்கு மனம் இல்லாததால் ஆண்டிபட்டி தாலுகா வட்டாட்சியர் திரு. காதர்செரீப் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகாரைக் கொடுக்கிறேன். அத்துடன் மேற்படி இந்தியன் ஆயில் கார்ப்பரேசனுக்கு நான் விண்ணப்பித்த விண்ணப்பத்தின் புகைப்பட நகலை இத்துடன் இணைத்துள்ளேன். அத்துடன் ஆண்டிபட்டி தாலுகா வட்டாட்சியர் திரு. காதர்செரீப் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.1,00,000/- கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- XXXXX (ரா.சுப்பிரமணியம், 27.05.2024)

Sir, Received this complaint on 27.05.2024 at 14.30 hrs. A confidential verification was conducted in respect of the complaint as well as the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crime No.01/2024, u/s 7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 was registered on 27.05.2024 at 16.00 hrs. Sd/- (P.Sundararajan, Deputy Superintendent of Police, V&AC, Theni).

The original FIR along with the original complaint of Tr.R.Subramaniam, S/o.Rajaram, No.32/36. Kasthuribai Nagar, Munisipalayam Road, Arapalayam, Madurai District is sent to the Chief Judicial Magistrate/ Special Judge for PC Act Cases, Theni District and copies are sent to the superior officers concerned.

27/5/2024

(P.SUNDARARAJAN)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Theni District.